**நீதித்துறை நடுவர் நீதிமன்றம், வாணியம்பாடி, திருப்பத்தூர் மாவட்டம்**

**முன்னிலை : திருமதி. கா. ஸ்ரீபதி, B.A., L.L.B.,**

நீதித்துறை நடுவர், வாணியம்பாடி.

2026ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 01 ஆம் நாள் வியாழன்கிழமை

ஆண்டுப்பட்டிகை வழக்கு எண் 65/2024

CNR NO.TNTU09-005411-2024

| வரிசை எண். | விளக்கம் | விவரங்கள் |
|---|---|---|
| 1. | குற்றமுறையிடுபவர் | அரசுக்காக காவல் உதவி ஆய்வாளர்,<br>அம்பலூர் காவல் நிலையம்,<br>குற்ற எண். 150/2024 |
| 2. | எதிரிகள் | எ1. சந்தீப் த/பெ. சந்திரன்<br>எ2. அரவிந்த்குமார் த/பெ. முரளி<br>எ3. திவாகர் த/பெ. ஆதிகேசவன்<br>எ4. சரண்குமார் க/பெ. ராஜா<br>எ5. அரவிந்தன் த/பெ. சின்னதம்பி |
| 3. | குற்றம் | பிரிவுகள் 143, 294(பி), 323, 506(ii) IPC r/w 4 of TNPHW act. |
| 4. | சம்பவம் நடந்த தேதி | 19.04.2024 |
| 5. | முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்ட நாள். | 20.04.2024 |
| 6. | எதிரிகள் கைது செய்யப்பட்ட நாள் மற்றும் பிணையில் சென்ற விபரம் மற்றும் நாள் | A1 – A3 – 21.04.2024 – 25.04.2024<br>A4, A5 – AB |
| 7. | குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்யப்பட்ட நாள் | 30.12.2024 |
| 8. | கு.வி.மு.ச.பிரிவு 241-ன் கீழ் குற்றம் குறித்து வினவப்பட்ட நாள் | 31.07.2025 |
| 9. | கு.வி.மு.ச.பிரிவு 317-ன் கீழ் தாக்கல் செய்யப்பட்ட மனுக்களை தவிர மற்ற மனுக்கள் தாக்கல் செய்யபட்ட விவரம் அதன் முடிவுகள். | 1.16.03.2026 குவிமுச.பிரிவு 320(2)-ன் கீழ் 511/2026. |
| 10 | வழக்கின் சாட்சிகள் முதல் விசாரணை மற்றும் குறுக்கு விசாரணை செய்யப்பட்ட நாள் | அ.சா.1 – 20.08.2025, 15.10.2025, 16.03.2026<br>அ.சா.2, அ.சா.3 – 20.08.2025, 15.10.2025<br>அ.சா.4 – 26.03.2026 |

| | | |
|---|---|---|
| 11 | எதிரிகளிடம் குற்றம் குறித்து கு.வி.மு.ச.313(1) (ஆ)–ன் கீழ் வினவிய நாள் | 27.03.2026 |
| 12 | எதிரிகள் மீது பிடியாணை வழங்கப்பட்ட நாள் மற்றும் திரும்ப பெறப்பட்ட நாள் | – |
| 13 | தீர்ப்பு பகரப்பட்ட நாள் | 01.04.2026 |
| 14 | தீர்வு | குவிமுச பிரிவு 248 (1) கீழ் விடுதலை. |

**நீதித்துறை படிவம் எண்: 61**

புகார்தாரர் : அரசுக்காக காவல் உதவி ஆய்வாளர், அம்பலூர் காவல் நிலையம்.

எதிரிகள் : எ1. சந்தீப் த/பெ. சந்திரன்
எ2. அரவிந்த்குமார் த/பெ. முரளி
எ3. திவாகர் த/பெ. ஆதிகேசவன்
எ4. சரண்குமார் க/பெ. ராஜா
எ5. அரவிந்தன் த/பெ. சின்னதம்பி

குற்றம் : பிரிவுகள் 143, 294(பி), 323, 506(ii) IPC r/w 4 of TNPHW act.

முடிவு : இறுதியாக, அரசு தரப்பில் 1 முதல் 5ம் எதிரிகளுக்கு எதிரான பிரிவுகள் 143, 294(பி), 323, 506(ii) IPC r/w 4 of TNPHW act. குற்றச்சாட்டுகள் ஆனது சந்தேகத்திற்கு இடம் இன்றி நிரூபிக்கப்படாததால் சந்தேகத்தின் பலன்களை எதிரிகளுக்கு அளித்து எதிரிகளை இவ்வழக்கில் இருந்து விடுதலை செய்வது நீதியின் நலனுக்கு உகந்தது என்று இந்த நீதிமன்றம் தீர்மானித்து 1 முதல் 5ம் எதிரிகளை வழக்கிலிருந்து குவிமுச பிரிவு 248 (1) கீழ் விடுதலை செய்து உத்தரவிட்டு தீர்ப்பளிக்கப்படுகிறது.

| வ. எண் | எதிரிகள் பெயர் | தந்தை/கணவர் பெயர் | சாதி (அ) இனம் | தொழில் | முகவரி | வயது |
|---|---|---|---|---|---|---|
| 1 | சந்தீப் | சந்திரன் | இந்து | கூலி | நியூ காலனி, ராமநாயக்கன்பேட்டை, வாணியம்பாடி. | 23 |
| 2 | அரவிந்த்குமார் | முரளி | இந்து | கூலி | பழைய காலனி, ராமநாயக்கன்பேட்டை, வாணியம்பாடி. | 30 |
| 3 | திவாகர் | ஆதிகேசவன் | இந்து | கூலி | நியூ காலனி, ராமநாயக்கன்பேட்டை, வாணியம்பாடி. | 21 |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 4 | சரண்குமார் | ராஜா | இந்து | கேண்டீன் மேலாளர் | பழைய காலனி, ராமநாயக்கன்பேட்டை, வாணியம்பாடி. | 25 |
| 5 | அரவிந்தன் | சின்னதம்பி | இந்து | வங்கி பணியாளர் | நியூ காலனி, ராமநாயக்கன்பேட்டை, வாணியம்பாடி. | 25 |

| தேதி | | | | | | | தாமதம் (ம) அதன் விளக்கம் |
|---|---|---|---|---|---|---|---|
| குற்றம் | புகார் அறிக்கை | கைது செய்யப்பட்ட நாள் | பிணையில் சென்ற நாள் | விசாரணையின் தொடக்கம் | விசாரணையின் முடிவு | உத்தரவு | |
| 19.04.24 | 20.04.24 | A1 – A3 – 21.04.24<br>A4, A5 – AB | A1 – A3 – 25.04.24<br>A4, A5 – AB | 31.07.25 | 27.03.26 | 01.04.26 | – |

இவ்வழக்கானது 30.12.2024 அன்று இந்நீதிமன்ற கோப்பில் எடுக்கப்பட்டு 27.03.2026–ம் தேதியன்று இறுதி விசாரணைக்கு வந்தபோது குற்றமுறையிடுபவர் தரப்பில் கற்றறிந்த அரசு குற்றதுறை உதவி வழக்கறிஞர் நிலை 1 திருமதி.மகேஸ்வரி அவர்கள் ஆஜராகியும் எதிரிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.R.கருணாகரன், B.Com., B.L., அவர்கள் ஆஜராகியும் இது நாள் வரை விசாரணை செய்தும் வழக்கின் சாட்சிகளின் சாட்சியங்கள் மற்றும் ஆவணங்களை பரிசீலனை செய்தும் இன்று இந்நீதிமன்றம் இவ்வழக்கில் வழங்கிடும்

## தீர்ப்புரை

### 1. குற்ற இறுதி அறிக்கையின் சுருக்கம்:

இவ்வழக்கில் அம்பலூர் காவல் நிலைய சரகத்திற்குட்பட்ட இராமநாயக்கன்பேட்டை கிராமத்தைச் சேர்ந்த சாட்சி1 அனிதா தன் வீட்டினிடம் இருந்தபோது கடந்த 19.04.2024ம் தேதி இரவு 09.30 மணிக்கு அதே கிராமத்தைச் சேர்ந்த எதிரிகள் 1. சந்தீப், 2. அரவிந்த்குமார், 3. திவாகர் மற்றும் மல்லாங்குப்பம் கிராமத்தை சேர்ந்த எதிரிகள் 4. சரண்குமார், 5. அரவிந்தன் ஆகியோர்கள் இருசக்கர வாகனத்தில் இடிப்பதுபோல் வந்ததை சாட்சி 1 அனிதா, 2. மாதேஸ்வரன் இருவரும் ஏன் இப்படி இடிப்பது போல் வருகிறீர்கள் என கேட்டதற்கு எதிரிகள் அனைவரும் ஒன்று சேர்ந்து நீயே ஒரு தேவிடியா, நீ என்னடி பேரழகியா, நீ என்ன பெரிய மயிரா என தகாத வார்த்தைகளால்

பேசியதாகவும், எதிரிகள் 1. சந்தீப், 2. அரவிந்த்குமார், 3. திவாகர், 4. சரண்குமார், 5. அரவிந்தன் ஆகியோர்கள் சாட்சி 1 அனிதா, 2. மாதேஸ்வரன், 3. மனோகரன், 4. பத்மாவதி ஆகியோர்களை கையால் அடித்து கீழே தள்ளி மார்பின் மீது அடித்து அதனால் சாட்சி 1 அனிதா, 3. மனோகரன், 4. பத்மாவதி ஆகியோருக்கு சொற்பகாயத்தை ஏற்படுத்தியதாகவும், எதிரிகள் 1. சந்தீப், 2. அரவிந்த்குமார், 3. திவாகர், 4. சரண்குமார், 5. அரவிந்தன் ஆகியோர்கள் சாட்சி 1 அனிதா, 2. மாதேஸ்வரன், 3. மனோகரன், 4. பத்மாவதி ஆகியோர்களிடம் இரும்பு கம்பியை காட்டி இதாலே உங்கள எல்லோரையும் கொன்று விடுவோம் என மிரட்டியதாகவும், எதிரிகள் 1. சந்தீப், 2. அரவிந்த்குமார், 3. திவாகர், 4. சரண்குமார், 5. அரவிந்தன் ஆகியோர்கள் சாட்சி 1 அனிதா, 4. பத்மாவதி ஆகியோர்களை பெண் என்று தெரிந்திருந்தும் புடவை மற்றும் நைட்டியை பிடித்து இழுத்து பெண்மைக்கு இழுக்கு ஏற்படும்படி நடந்து கொண்டுள்ளார். எனவே, எதிரிகள் இ.த.ச. பிரிவுகள் 143, 294(பி), 323, 506(ii) உ/இ பிரிவு 4 பெண்கள் வன்கொடுமை தடுப்புச் சட்டத்தின் கீழ் தண்டிக்கத்தக்க குற்றம் புரிந்துள்ளதாக அம்பலூர் காவல் நிலைய உதவி ஆய்வாளர் எதிரிகளின் மீது இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

2. எதிரிகள் மீது முகாந்திர வழக்கு இருப்பதால் இவ்வழக்கானது இந்நீதிமன்றத்தால் இ.த.ச. பிரிவுகள் 143, 294(பி), 323, 506(ii) உ/இ பிரிவு 4 பெண்கள் வன்கொடுமை தடுப்புச் சட்டத்தின் கீழ் கோப்பிற்கு எடுக்கப்பட்டு, எதிரிகளுக்கு அழைப்பாணை அனுப்பப்பட்டது. இந்த வழக்கில் எதிரிகள் ஆஜரானதும் வழக்கில் தாக்கல் செய்யப்பட்ட ஆவணத்தின் நகல்கள் அனைத்தும் எதிரிக்கு கு.வி.மு.ச. பிரிவு 207ன்படி இலவசமாக வழங்கப்பட்டது.

3. குற்றம்சாட்டப்பட்ட நபர்களுக்கு போதிய கால அவகாசம் கொடுத்து, ஆவணங்களை பரிசீலித்தும் எதிரிகள் மீதான குற்ற செயல்களை விசாரிக்க போதுமான முகாந்திரம் இருந்த காரணத்தினால், எதிரிகள் மீது இ.த.ச பிரிவுகள் 143, 294(பி), 323, 506(ii) உ/இ பிரிவு 4 பெண்கள் வன்கொடுமை தடுப்புச் சட்டத்தின் கீழான குற்றச்சாட்டுகள் வனைந்து விளக்கி கூற வினவியபோது, எதிரிகள் குற்றத்தை மறுத்துரைத்ததால் அரசு

தரப்பு சாட்சிகள் விசாரணைக்கு உத்தரவிடப்பட்டது.

4. அரசு தரப்பில் **அ.சா.1 முதல் அ.சா.4** வரையிலான சாட்சிகள் விசாரிக்கப்பட்டுள்ளனர். மேலும், இவ்வழக்கின் புலன்விசாரணை அதிகாரிகளான திரு.சையத் அப்சல், உதவி ஆய்வாளருக்கு பதிலாக அம்பலூர் காவல் நிலையத்தின் தற்போதைய உதவி ஆய்வாளர் திரு. காதர்கான் ஆவணங்களின் அடிப்படையில் அ.சா.4 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார். இதற்கு எதிரிகள் தரப்பில் எவ்வித ஆட்சேபனையும் இல்லை என தெரிவிக்கப்பட்டது. **அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.8** வரையிலான சான்றாவணங்கள் மற்றும் **சான்றுபொருள் சா.பொ.1** ஆகியவை குறியீடு செய்யப்பட்டுள்ளன.

**5.அரசு தரப்பு சாட்சியங்களின் மூலம் தெரியவரும் அரசுதரப்பு வழக்கின் சுருக்கம் :**

5 (i) அ.சா.1 அனிதா இவ்வழக்கின் புகார்தாரர் ஆவார். அ.சா.1 அனிதா கடந்த 19.04.2024ம் தேதி, இரவு 09.30 மணியளவில் ராமநாயக்கன்பேட்டை பேருந்து நிலையத்தில் வயிற்று பிரச்சனை காரணமாக ரோட்டில் நடைபயிற்சி மேற்கொண்டு இருந்தபோது எதிரிகள் நால்வரும் இருசக்கர வாகனத்தில் வந்தவர்களை ஓரமாக செல்லும் படியும் இருட்டாக உள்ளது, மேலே மோதாமல் செல்லுங்கள் என்று அவர்களிடம் நான் சொன்னதற்கு எதிரிகள் நால்வரும் என்னடி சொன்ன தேவிடியா என்று என்று கேட்டதாகவும், அ.சா.1ன் கணவர் மாதேஷ்வரன் ஏன் என் மனைவியை தேவடியா என்று கேட்கிறீர்கள் என்று கேட்டதற்கு எதிரிகள் நால்வரும் என் கணவரை கையால் வாய், முகம் மீது அடித்து பனியனை பிடித்து இழுத்து கிழித்ததாகவும், பின் எதிரிகள் வண்டியை அவர்கள் வீட்டில் விட்டு விட்டு சுமார் பத்து நிமிடத்தில் சுமார் 50 நபர்களை அழைத்து வந்து வீட்டில் இருந்த என் கணவரை எதிரிகள் நால்வரும் உள்ளே இருந்து வெளியே இழுத்து நால்வரும் முதுகின் மீது இரும்பு ராடால் அடித்து என் மச்சினர் ராஜேஷ் வந்து ஏன் என் அண்ணனை அடிக்கிறீர்கள் என்று கேட்டபோது என் மச்சினரையும் எதிரிகள் நால்வரும் கையால் கை, கால், உடல் மீது அடித்து, என் மாமனாரையும் அடித்து கீழே தள்ளி விட்டு, பத்மாவதி மயக்கமாகி விட்டதால் அ.சா.1, அவரது மாமனார் மனோகரன், மாமியார் பத்மாவதி மூவரும் வாணியம்பாடி அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்ந்துள்ளார்கள். வாணியம்பாடி அரசு

மருத்துவமனையிலிருந்து கிடைக்கப்பெற்ற தகவலின் அடிப்படையில் திரு.சையது அப்சல், உதவி ஆய்வாளர் மருத்துவமனை சென்று அ.சா.1 அனிதாவை விசாரித்து அ.சா.ஆ.1 புகார் வாக்குமூலம் பெற்றுள்ளார்.

(ii) திரு.சையது அப்சல், உதவி ஆய்வாளர் அ.சா.ஆ.1 புகார் வாக்குமூலம் பெற்று அதற்கேற்ப நிலைய குற்ற எண் 150/2024 இ.த.ச பிரிவுகள் 143, 294(பி), 323, 506(2) உ/இ பிரிவு 4 பெண்கள் வன்கொடுமை தடுப்புச் சட்டத்தின் கீழ் அ.சா.ஆ.2 முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளார். பின் 20.04.2024ம் தேதி 16.00 மணிக்கு சம்பவயிடத்தை பார்வையிட்டு சாட்சிகள் சூர்யகுமார், முரளி ஆகியோர் முன்னிலையில் அ.சா.ஆ.3 பார்வை மகஜர் மற்றும் அ.சா.ஆ.4 மாதிரி வரைபடம் தயார் செய்துள்ளார். பின்னர் சாட்சிகள் திருமால் மற்றும் பிரபு முன்னிலையில் சம்பவயிடத்தில் எதிரி பயன்படுத்திய சா.பொ.1 இரும்பு கம்பி ஒன்றை அ.சா.ஆ.5 கைப்பற்றியுள்ளார். படிவம் 91 வழக்கு கோப்பில் இல்லாததால் குறியீடு செய்யப்படவில்லை. பின்னர் சாட்சிகள் அ.சா.1 அனிதா, அ.சா2 மனோகரன், அ.சா.3 பத்மாவதி, மாதேஷ்வரன், ராஜேஷ், சூரியகுமார், முரளி, திருமால் மற்றும் பிரபு ஆகியோர்களை தனித்தனியே விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார்.

5(iii) எதிரிகள் சந்தீப், அரவிந்த்குமார், திவாகர் ஆகியோர்களை முறைப்படி கைது செய்து நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தியுள்ளார். மற்ற எதிரிகளான சரண்குமார், அரவிந்த்குமார் ஆகியோர் மாண்புமிகு திருப்பத்தூர் மாவட்ட அமர்வு நீதிமன்றத்தில் முன்பிணை பெற்றதால் கைது செய்ய இயலவில்லை என்றும், காயம்பட்ட அ.சா.1 அனிதா, அ.சா2 மனோகரன், அ.சா.3 பத்மாவதி ஆகியோருக்கு சிகிச்சை அளித்த மருத்துவர் திரு.தினேஷ் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து சொற்பகாயம் என வழங்கிய அ.சா.ஆ.6 முதல் அ.சா.ஆ.8 வரையிலான காயச்சான்றுகளை பெற்றுள்ளார். தனது புலன்விசாரணையை முடித்து எதிரிகள் மீதான குற்றம் உண்மையென தெரியவந்ததால் எதிரிகள் மீது இ.த.ச. பிரிவுகள் 143, 294(பி), 323, 506(2) உ/இ பிரிவு 4 பெண்கள் வன்கொடுமை தடுப்புச் சட்டத்தின் படி இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

6. அரசு தரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சிகளின் சாட்சியங்களில் இருந்தும் மற்றும் சான்றாவணங்களில் இருந்தும் குற்றம் சாட்டப்பட்ட நபருக்கு பாதகமாக அமைந்ததை சாட்சிய சூழ்நிலைகளை எதிரியிடம் குவிமுச பிரிவு 313(i)(ஆ)–ன் கீழ் வினவியபோது எதிரி மேற்படி சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்கள் பொய் என கூறினார். மேலும். எதிரி தரப்பில் சாட்சிகள் யாரும் விசாரிக்கப்படவில்லை மற்றும் சான்றாவணங்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை.

**இவ்வழக்கில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை யாதெனில் அரசு தரப்பில், எதிரிகள் மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுகள் சம்பவத்தை தகுநிலை ஐயத்திற்கு இடமின்றி நிரூபணம் செய்யப்பட்டுள்ளதா என்பதேயாகும்**

7. இவ்வழக்கில் கடந்த 19.04.2024ம் தேதி இரவு 09.30 மணிக்கு அதே கிராமத்தைச் சேர்ந்த எதிரிகள் 1. சந்தீப், 2. அரவிந்த்குமார், 3. திவாகர் மற்றும் மல்லாங்குப்பம் கிராமத்தை சேர்ந்த எதிரிகள் 4. சரண்குமார், 5. அரவிந்தன் ஆகியோர்கள் இருசக்கர வாகனத்தில் இடிப்பதுபோல் வந்ததை சாட்சி 1 அனிதா, 2. மாதேஸ்வரன் இருவரும் ஏன் இப்படி இடிப்பது போல் வருகிறீர்கள் என கேட்டதற்கு எதிரிகள் அனைவரும் ஒன்று சேர்ந்து நீயே ஒரு தேவிடியா, நீ என்னடி பேரழகியா, நீ என்ன பெரிய மயிரா என தகாத வார்த்தைகளால் பேசியதாகவும், சாட்சி 1 அனிதா, 2. மாதேஸ்வரன், 3. மனோகரன், 4. பத்மாவதி ஆகியோர்களை கையால் அடித்து கீழே தள்ளி மார்பின் மீது அடித்து அதனால் சாட்சி 1 அனிதா, 3. மனோகரன், 4. பத்மாவதி ஆகியோருக்கு சொற்பகாயத்தை ஏற்படுத்தியதாகவும், எதிரிகள் 1. சந்தீப், 2. அரவிந்த்குமார், 3. திவாகர், 4. சரண்குமார், 5. அரவிந்தன் ஆகியோர்கள் சாட்சி 1 அனிதா, 2. மாதேஸ்வரன், 3. மனோகரன், 4. பத்மாவதி ஆகியோர்களிடம் இரும்பு கம்பியை காட்டி இதாலே உங்கள எல்லோரையும் கொன்று விடுவோம் என மிரட்டியதாகவும், எதிரிகள் 1. சந்தீப், 2. அரவிந்த்குமார், 3. திவாகர், 4. சரண்குமார், 5. அரவிந்தன் ஆகியோர்கள் சாட்சி 1 அனிதா, 4. பத்மாவதி ஆகியோர்களை பெண் என்று தெரிந்திருந்தும் புடவை மற்றும் நைட்டியை பிடித்து இழுத்து பெண்மைக்கு இழுக்கு ஏற்படும்படி நடந்து கொண்டதாக அரசு தரப்பில் எதிரிகளின் மீது குற்றம்சாட்டப்பட்டுள்ளது.

8. அ.சா.1 அனிதா இவ்வழக்கின் புகார்தாரர் ஆவார். அ.சா.1 அனிதா தனது நீதிமன்ற விசாரணையின்போது, " கடந்த 19.04.2024 ம்தேதி, இரவு 09.30 மணியளவில் ராமநாயக்கன்பேட்டை பேருந்து நிலையத்தில் வயிற்று பிரச்சனை காரணமாக ரோட்டில் நடைபயிற்சி மேற்கொண்டு இருந்தேன். எதிரிகள் நால்வரும் இருசக்கர வாகனத்தில் வந்தார்கள். ஓரமாக செல்லும் படியும் இருட்டாக உள்ளது, மேலே மோதாமல் செல்லுங்கள் என்று அவர்களிடம் நான் சொன்னேன். அதற்கு அவர்கள் நால்வரும் என்னடி சொன்ன தேவிடியா என்று என்று என்னை கேட்டார்கள். அதற்கு என் கணவர் மாதேஷ்வரன் ஏன் என் மனைவியை தேவடியா என்று கேட்கிறீர்கள் என்று கேட்டார். அதற்கு எதிரிகள் நால்வரும் என் கணவரை கையால் வாய், முகம் மீது அடித்தார்கள். பனியனை பிடித்து இழுத்து கிழித்தார்கள். நான் எனது கணவரை வீட்டிற்குள் அழைத்து வந்துவிட்டேன். அதன் பிறகு எதிரிகள் வண்டியை அவர்கள் வீட்டில் விட்டு விட்டு சுமார் பத்து நிமிடத்தில் சுமார் 50 நபர்களை அழைத்து வந்தார்கள். வீட்டில் இருந்த என் கணவரை எதிரிகள் நால்வரும் உள்ளே இருந்து வெளியே இழுத்தார்கள். வெளியே இழுத்து என் கணவரை முதுகின் மீது நால்வரும் இரும்பு ராடால் அடித்தார்கள். என் மச்சினர் ராஜேஷ் வந்து ஏன் என் அண்ணனை அடிக்கிறீர்கள் என்று கேட்டபோது என் மச்சினரையும் எதிரிகள் நால்வரும் கையால் கை, கால், உடல் மீது அடித்தார்கள். அதை கேட்க என் மாமனார் மனோகரன், மாமியார் பத்மாவதி வந்தார்கள். என் மாமனாரையும் அடித்து கீழே தள்ளி விட்டார்கள். சம்பவத்திற்கு முன்பு ஒரு விபத்தில் காலில் அடிப்பட்டு அறுவை சிகிச்சை செய்யப்பட்டு நடப்பதற்கு சிரம்மபட்டு வந்த நிலையில் இருந்தார். என் மாமியார் பத்மாவதியை கீழே தள்ளி விட்டு அவர் அணிந்திருந்த புடவையை எதிரிகள் நால்வரும் அவிழ்த்து விட்டார்கள். அவர் கையில் அணிந்திருந்த வளையல்கள் உடைந்து வலது கை முழுவதும் இரத்த காயம் ஏற்பட்டது. அவருக்கும் சம்பத்திற்கு முன்பு தலையில் அறுவை சிகிச்சை செய்யப்பட்டு இருந்தது. சம்பத்தில் இவ்வாறு நடந்ததால் எனது மாமியார் மயக்கமாகி விட்டார். எனக்கு பயமாக இருந்ததால் கேட்டின் உள்ளே நின்றுக்கொண்டிருந்தேன். அந்த சமயம் நான் நைட்டி அணிந்து இருந்தேன். அச்சமயம் கேட்டினுள் கையை விட்டு என் நைட்டியை பிடித்து இழுத்தார்கள். எங்கள் ஊர் தலைவர் R.R வாசு மற்றும் உதவி ஆய்வாளர் வந்ததை பார்த்து எதிரிகள்

ஓடிவிட்டனர். மயக்கமாக இருந்த எனது மாமியாரை 108 ஆம்புலன்ஸ் முலமாக வாணியம்பாடி அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றோம். அதன் பின் வெள்ளிக்கிழமை இரவு 11.00 மணிமுதல் நானும் எனது மாமியார், மாமனார் ஆகிய மூவரும் ஞாயிற்றுக்கிழமை மதியம் 03.00 மணிவரை சிகிச்சை பெற்று சென்றோம். எதிரிகள் அடிக்கபயன்படுத்திய இரும்பு ராடை தற்போது என்னால் அடையாளம் காட்ட முடியும். தற்போது நீதிமன்றத்தில் காட்டப்படும் இரும்பு ராடு தான் அது. " என சாட்சியம் அளித்துள்ளார். எதிரி தரப்பு குறுக்கு விசாரணையின்போது " நான் இதற்கு முன் நீதிமன்றத்தில் சொல்லிய சாட்சியங்கள் அனைத்தும் போலிசார் சொல்லிக்கொடுத்ததின் அடிப்படையில் தான் சொல்லினேன் என்றும், எதிரிகள் யாரும் என்னை அடிக்கவில்லை என்றும், போலிசார் சொன்னதின் அடிப்படையில் தான் எதிரிகளை எனக்கு தெரியும் என்றும், நான் இதற்கு முன் நீதிமன்றத்தில் காண்பித்த புகார் வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் மட்டும் தான் என்னுடையது என்றும், மற்றவிவரங்கள் அனைத்தும் எனது அண்ணன், அண்ணி கூற தான் போலிசார் எழுதிக்கொண்டார்கள் என்றும், நான் கையொப்பம் செய்த தாளில் என்ன எழுதிக்கொண்டார்கள் என்ற விவரம் இந்நாள் வரை எனக்கு தெரியாது என்றும், போலிசார் சொன்னதின் அடிப்படையில் தான் அந்த இரும்பு ராடு எனக்கு தெரியும் என்றும், இரும்பு ராடால் என்னையும் என் மாமானார், மாமியாரையும் எதிரிகள் அடிக்கவில்லை என்றும், அதை காண்பித்து கொலைமிரட்டல் விடுக்கவில்லை என்றும், 19.04.2024 இரவு 09.30 மணிக்கு இருட்டான பகுதியில் கீழே விழுந்துதான் காயம் ஏற்பட்டது என்றும், எதிரிகளுக்கும் இவ்வழக்கிற்கும் எவ்வித சம்மந்தமும் இல்லை. " என அவரது முதன்மை சாட்சியத்திற்கு முற்றிலும் முரணாக சாட்சிமளித்துள்ளார்.

9. இவ்வழக்கில் மற்றொரு காயமுற்ற சாட்சியான அ.சா.2 மனோகரன் தனது நீதிமன்ற விசாரணையின்போது, " கடந்த 19.04.2024 ம்தேதி, இரவு 09.30 மணியளவில் என் மருமகள் அனிதாவையும், மகன் மாதேஷ்வரனையும் புத்துக்கண்ணு – ஆவாரங்குப்பம் செல்லும் ரோட்டில் எங்கள் வீட்டின் எதிரே அந்த பசங்க அடித்துக்கொண்டிருப்பதாக ஊரில் உள்ளவர்கள் சொன்னார்கள். நான் சுமார் கால் மணி நேரத்தில் சம்பவயிடத்திற்கு

வந்து பார்த்தேன். அப்போது என் மனைவி பத்மாவதியை அந்த பசங்க கீழே தள்ளி புடவையை உருவி வளையலை உடைத்து கைகளில் இரத்தம்வந்துக்கொண்டிருந்தது. அந்த நபர்களிடம் இவ்வாறு சண்டை செய்கிறீர்கள் எதுவாக இருந்தாலும் பேசிக்கொள்ளலாம் என்று நான் சொல்லிக்கொண்டிருக்கும் போதே அவர்களில் இரு நபர்கள் என் கைகள் இரண்டையும் பிடித்து கொண்டார்கள், மற்ற இருவரும் நான் அணிந்திருந்த பனியனை பிடித்துக்கொண்டார்கள். **மேற்படி என்னை கைகளை பிடித்துக்கொண்ட மற்றும் அணிந்திருந்த பனியனை பிடித்துக்கொண்ட நபர்களை தற்போது தன்னால் அடையாளம் காட்ட இயலுமா என்றால் கண் பார்வை மந்தமாக உள்ளது, அறுவை சிகிச்சை செய்யவேண்டி உள்ளது, அதனால் அடையாளம் காட்ட இயலாது.** அவர்களில் என் முழங்கால் உயரம் உள்ள ஒரு பையன் ஓடி வந்து என் முட்டியின் மேல் எகிறி என் இடது கன்னத்தின் மீது பளார் என்று அறைந்தான். அதற்கு பின் நான் உடலை அசைத்ததும் அந்த பையன் கீழே விழுந்து விட்டான். அவன் செல்லும்போது உங்கள் வீடே இங்கு இருக்காது என்று சொல்லிவிட்டு சென்றான். அதன் பின் காயம்பட்ட நானும் எனது மருமகள், எனது மனைவி மூவரும் ஆம்புலன்ஸ் மூலம் சிகிச்சைக்காக வாணியம்பாடி அரசு மருத்துவமணைக்கு சென்றோம். " என சாட்சியம் அளித்துள்ளார்.

10. மற்றொரு காயமுற்ற சாட்சியான அ.சா.3 பத்மாவதி தனது நீதிமன்ற விசாரணையின்போது, " கடந்த 19.04.2024 இரவு 09.30 மணிமுதல் 09.45 மணியளவில் இராமநாக்கன்பேட்டை பேருந்து நிலையத்தில் பள்ளிக்கு அருகே எங்கள் வீடு உள்ளது. நாங்கள் சற்று தொலைவில் இருந்தோம். எனது பேத்தி வானதி ஓடி வந்து மாதேஷ்வரனையும் அனிதாவையும் அடித்துக்கொண்டிருப்பதாக என்னிடம் சொன்னார். சுமார் 10 நிமிடத்திற்குள் சம்பவம் இடத்திற்கு வந்தோம். **அங்கு சுமார் 50 பேர் கூட்டமாக இருந்தனர். அப்போது இருட்டாக இருந்தது. அதில் யார் எங்களை அடித்தார்கள் என்று தெரியாது.** என்னவென்று பார்த்தபோது அதில் என்னையும் அடித்ததில் கையில் அணிந்திருந்த வளையல் உடைந்தது, ஏற்கனவே விபத்தின் போது தலையில் அடிப்பட்டு இருந்ததால் தையல் போட்டிருந்த வலது புருவத்தில் இருந்து இரத்தம் வந்தது. நான் அணிந்திருந்த புடவையை உருவிட்டார்கள், கீழே தள்ளி

விட்டார்கள். என் மகன்கள் மாதேஷ், ராஜேஷ் ஆகியோரை எதிரிகள் அடித்தார்கள். கையாலே அடித்தார்கள். கையால் என் நெஞ்சின் மீது குத்தியதில் நான்கீழே விழுந்துவிட்டேன். " என சாட்சியம் அளித்துள்ளார்.

11. அரசு தரப்பில் பட்டியல் சாட்சி 2, 5, 6, 7, 8, 9, 10, 11 விசாரிப்பதிலிருந்து விலக்கப்பட்டுள்ளார்கள். அரசு தரப்பில் விசாரிக்கப்பட்ட இவ்வழக்கின் புகார்தாரர் அ.சா.1 அனிதா, மற்ற காயமுற்ற சாட்சிகளான அ.சா.2 மனோகரன், அ.சா.3 பத்மாவதி ஆகியோர்கள் அரசு தரப்பு வழக்கிற்கு முரணாக சாட்சியம் அளித்துள்ள நிலையில், அ.சா.1 நீதிமன்றத்தின் அனுமதியுடன் அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ததில், அரசு தரப்பு வழக்கு வலுசேர்க்கும் வகையில் எவ்வித சங்கதிகளும் வெளிக்கொணரப்படவில்லை. ஆகையால், அ.சா.1 முதல் அ.சா.3 வரையிலானவர்களின் சாட்சியம் அரசு தரப்பில் எதிரிகள் மீதான குற்றச்சாட்டை நிரூபிக்க உகந்தது அல்ல என இந்நீதிமன்றம் கருதுகிறது.

12. அ.சா.4 காதர்கான், உதவி ஆய்வாளர், அவரது சாட்சியத்தில் வாணியம்பாடி அரசு மருத்துவமனையில் இருந்து கிடைக்கப்பெற்ற தகவலின் பெயரில் அ.சா.1 அனிதாவை விசாரித்து அ.சா.ஆ.1 புகார் வாக்குமூலத்தினைப் பெற்று அ.சா.ஆ.2 முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து, சம்பவயிடத்தை பார்வையிட்டு சாட்சிகள் முன்னிலையில் அ.சா.ஆ.3 பார்வை மகஜர் மற்றும் அ.சா.ஆ.4 மாதிரி வரைபடம் தயார் செய்ததை குறித்தும், சாட்சிகள் முன்னிலையில் சா.பொ.1 இரும்பு கம்பி ஒன்றை அ.சா.ஆ.5 கைப்பற்றுதல் மகஜர் மூலம் கைப்பற்றியதை குறித்தும், சாட்சிகளை விசாரித்து தனித்தனியே வாக்குமூலம் பதிவு செய்து, 1, 2, 3ம் எதிரிகளை கைது செய்து நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தியும், நான்கு மற்றும் ஐந்தாம் எதிரிகள் மாண்புமிகு திருப்பத்தூர் மாவட்ட அமரவு நீதிமன்றத்தில் முன்பிணை பெற்றிருந்ததால் அவர்களை கைது செய்யவில்லை. அ.சா.1 அனிதா, அ.சா.2 மனோகரன் மற்றும் அ.சா.3 பத்மாவதி ஆகியோருக்கு சிகிச்சையளித்த மருத்துவர் திரு. தினேஷ், என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து அ.சா.ஆ.6 முதல் அ.சா.ஆ.8 வரையிலான காயச்சான்றுகளை பெற்று புலன் விசாரணை முடித்து இறுதி அறிக்கை தாக்கல் செய்து

குறித்து ஆவணங்களின் அடிப்படையில் சாட்சியம் அளித்துள்ளார் என்பது புலனாகிறது.

13. அ.சா.1 அனிதா, போலீசார் விசாரணையிலும், புகார் வாக்குமூலத்திலும் தன்னை எதிரிகள் ஐவரும் சேர்ந்து நீயே ஒரு தேவிடியா, நீ என்னடி பேரழகியா, நீ என்ன பெரிய மயிரா என தகாத வார்த்தைகளால் பேசியதாகவும், அ.சா.1 முதல் அ.சா.3 வரையிலானவர்களை கையால் அடித்து கீழே தள்ளி மார்பின் மீது அடித்து சொற்பகாயத்தை ஏற்படுத்தியதாகவும், இரும்பு கம்பியை காட்டி இதாலே உங்கள எல்லோரையும் கொன்று விடுவோம் என மிரட்டியதாகவும், சாட்சி 1 அனிதா, 4. பத்மாவதி ஆகியோர்களை பெண் என்று தெரிந்திருந்தும் புடவை மற்றும் நைட்டியை பிடித்து இழுத்து பெண்மைக்கு இழுக்கு ஏற்படும்படி நடந்து கொண்டதாக கூறிவிட்டு, அவரது முதன்மை விசாரணையில் எதிரிகள் திட்டியதாகவும், அடித்ததாகவும் கூறிவிட்டு தனது எதிரி தரப்பு குறுக்கு விசாரணையின்போது, அரசு தரப்பு வழக்கிற்கு எதிராக நான் இதற்கு முன் நீதிமன்றத்தில் சொல்லிய சாட்சியங்கள் அனைத்தும் போலிசார் சொல்லிக்கொடுத்ததின் அடிப்படையில் தான் சொல்லினேன் என்றும், எதிரிகள் யாரும் என்னை அடிக்கவில்லை என்றும், போலிசார் சொன்னதின் அடிப்படையில் தான் எதிரிகளை எனக்கு தெரியும் என்றும் முரணாக சாட்சியம் அளித்துள்ளார். மேலும், அதற்கேற்றாற்போல், வழக்கு நிலுவையில் இருக்கும்போது எதிரிகளும் அ.சா.1 சமாதானம் ஆகிவிட்டதாக கொடுத்த 16.03.2026ம் தேதி கு.வி.மு.ச பிரிவு 320ன் கீழ் குற்ற பல்வகை மனு எண் 511/2026ன் கீழ் தாக்கல் செய்துள்ளார்கள். மேற்படி, மனுவானது இவ்வழக்கின் சில குற்றங்கள் சட்டப்படியாக சமரசம் தீர்த்துக்கொள்ள முடியாத குற்றங்கள் என்பதால் தள்ளுபடி செய்யப்பட்டது.

14. இவ்வழக்கில் புகார்தாரர் மற்றும் காயமுற்ற சாட்சியான அ.சா.1 அனிதா அரசு தரப்பு வழக்கிற்கு எதிராக நான் இதற்கு முன் நீதிமன்றத்தில் காண்பித்த புகார் வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் மட்டும் தான் என்னுடையது என்றும், மற்றவிவரங்கள் அனைத்தும் எனது அண்ணன், அண்ணி கூற தான் போலிசார் எழுதிக்கொண்டார்கள் என்றும், நான் கையொப்பம் செய்த தாளில் என்ன

எழுதிக்கொண்டார்கள் என்ற விவரம் இந்நாள் வரை எனக்கு தெரியாது என்றும் சாட்சியம் அளித்துள்ளதாலும், மேலும், இவ்வழக்கில் ஐந்து நபர்கள் மீது குற்றம் சாட்டப்பட்டுள்ள நிலையில் அ.சா.1 அவரது முதன்மை சாட்சியத்தில் நான்கு எதிரிகள் தான் தாக்கியதாக கூறியுள்ளதாலும், அவரது முதன்மை சாட்சியத்திற்கு முற்றிலும் முரணாக குறுக்கு விசாரணையில் சாட்சியம் அளித்துள்ளதாலும், அ.சா.ஆ.1 புகார்வாக்குமூலமும் அ.சா.1 ன் சாட்சியமும் சந்தேகத்திற்கு உள்ளாகிறது என இந்நீதிமன்றம் கருதுகிறது. மற்றொரு காயமுற்ற சாட்சியான அ.சா.2 மனோகரன் எதிரிகளின் பெயர்களை குறிப்பிட்டு கூறவில்லை என்பதாலும், **தற்போது எதிரிகளை அடையாளம் காட்ட இயலாது** என சாட்சியம் அளித்துள்ளதாலும், மற்றொரு காயமுற்ற சாட்சியான அ.சா.3 பத்மாவதி **சுமார் 50 பேர் கூட்டமாக இருந்தனர், அப்போது இருட்டாக இருந்தது, அதில் யார் எங்களை அடித்தார்கள் என்று தெரியாது** என சாட்சியம் அளித்துள்ளதாலும், அரசு தரப்பில் அ.சா.1 முதல் அ.சா.3 வரையிலானவர்கள் அரசு தரப்பு வழக்கை வலுசேர்க்கும் வகையில் சாட்சியம் அளிக்காத நிலையில், அ.சா.4ன் சாட்சியத்தை மட்டும் வைத்துக்கொண்டு எதிரிகள் குற்றம் புரிந்தார்கள் என தீர்மானிக்க இயலாது என்பதாலும், அரசு தரப்பில் எதிரிகளின் மீது சுமத்தப்பட்ட இ.த.ச பிரிவுகள் 143, 294(பி), 323, 506(ii) உ/இ பிரிவு 4 பெண்கள் வன்கொடுமை தடுப்புச் சட்டத்தின் கீழான குற்றச்சாட்டுகள் அரசு தரப்பில் நிரூபணம் செய்யப்படவில்லை என்று மேற்கண்ட பிரச்சனைக்கு அரசு தரப்பு வழக்கிற்கு எதிராக தீர்வு காணப்படுகிறது.

15. **<u>முடிவாக,</u>** இவ்வழக்கின் 1 முதல் 5 எதிரிகள் மீதான இ.த.ச. பிரிவுகள் 143, 294(பி), 323, 506(ii) உ/இ பிரிவு 4 பெண்கள் வன்கொடுமை தடுப்புச் சட்டத்தின் கீழான குற்றச்சாட்டுகளை பொறுத்து 1 முதல் 5 எதிரிகள் குற்றவாளிகள் இல்லை என முடிவு செய்து 1 முதல் 5 எதிரிகள் கு.வி.மு.ச பிரிவு 248(1)ன்படி விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது.

16. இவ்வழக்கில் சி.பி.186/2024–ல் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்கு சொத்தான சா.பொ.1 இரும்பு கம்பி ஒன்று. இதன் நீளம் சுமார் 35 செ.மீ. சுற்றளவு சுமார் 6 செ.மீ. ஒன்று மேல்முறையீட்டு காலத்திற்கு பின்னர் அழிக்க உத்தரவிடப்படுகிறது. எதிரிகள்

எழுதி கொடுத்த பிணை பத்திரத்தை மேல்முறையீடு காலத்திற்கு பின் ரத்து செய்து உத்தரவிடப்படுகிறது.

இந்த தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு பின்னர் என்னால் பிழைநீக்கம் செய்து சரிபார்க்கப்பட்டு இன்று 2026–ம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 01ஆம் நாள் இத்திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

(ஒம்/–கா.ஸ்ரீபதி)
நீதித்துறை நடுவர்,
வாணியம்பாடி.

**அரசு தரப்பு சாட்சிகள்**

| | | |
|---|---|---|
| 1 | அ.சா.1 | திருமதி. அனிதா |
| 2 | அ.சா.2 | திரு. மனோகரன் |
| 3 | அ.சா.3 | திருமதி. பத்மாவதி |
| 4 | அ.சா.4 | திரு. காதர்கான், உதவி ஆய்வாளர். |

**அரசு தரப்பு சான்றாவணங்கள்**

| | | |
|---|---|---|
| 1. | அ.சா.ஆ.1 | 20.04.2024ஆம் தேதியிட்ட புகார்வாக்குமூலம். |
| 2. | அ.சா.ஆ.2 | 20.04.2024ஆம் தேதியிட்ட முதல் தகவல் அறிக்கை. |
| 3. | அ.சா.ஆ.3 | 20.04.2024ஆம் தேதியிட்ட பார்வை மகசர். |
| 4. | அ.சா.ஆ.4 | 20.04.2024ஆம் தேதியிட்ட மாதிரி வரைபடம். |
| 5. | அ.சா.ஆ.5 | 21.04.2024ஆம் தேதியிட்ட கைப்பற்றுதல் மகசர். |
| 6. | அ.சா.ஆ.6 | 19.04.2024ஆம் தேதியிட்ட அ.சா.1 அனிதாவின் காயச்சான்று. |
| 7. | அ.சா.ஆ.7 | 19.04.2024ஆம் தேதியிட்ட அ.சா.2 மனோகரனின் காயச்சான்று.. |
| 8. | அ.சா.ஆ.8 | 19.04.2024ஆம் தேதியிட்ட அ.சா.3 பத்மாவதியின் காயச்சான்று.. |

**அரசு தரப்பு சான்று பொருள்** –

| | | |
|---|---|---|
| 1. | சா.பொ.1 | இரும்பு கம்பி ஒன்று. இதன் நீளம் சுமார் 35 செ.மீ. சுற்றளவு சுமார் 6 செ.மீ. |

**எதிரி தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றுப் பொருட்கள் –** இல்லை.

**எதிரி தரப்பு சான்றாவணம் –** இல்லை

**குறிப்பு**

1) எந்த சாட்சியும் 3 முறைக்குமேல் நிறுத்தி விசாரிக்கப்படவில்லை.

2) வழக்கு விசாரணையின் போது எதிரி பிணையில் இருந்தார்.

3) முடிவு காவல் துறையினருக்கு தெரிவிக்கப்பட்டது.

(ஒம்/–கா.ஸ்ரீபதி)
நீதித்துறை நடுவர்,
வாணியம்பாடி.

**//உண்மை நகல்//**

SRIPATHI K

JUDICIAL MAGISTRATE, VANIYAMBADI
Digitally signed by SRIPATHI K
Location: TIRUPATHUR

**நீதித்துறை நடுவர்,**
**வாணியம்பாடி.**